# சிசுக்களுக்கான கேட்டல்திறன் திட்டம்



## உங்கள் பிள்ளை மொழியைக் கற்க உதவிசெய்தல்

1,000 குழந்தைகளில் இரண்டு குழந்தைகளுக்குப் பிறக்கும்போதே நிரந்தரமான கேட்டல்திறன் பாதிப்பு இருக்கிறது, மேலும் இரண்டு பேருக்கு ஐந்து வயதளவில் நிரந்தரமான கேட்டல்திறன் இழப்பு ஏற்படுகிறது. செவிப்புலனற்ற அல்லது கேட்பதில் சிரமம் இருக்கும் பிள்ளைகள் பாடசாலைக்குத் தயாராவதற்கு உதவிசெய்வதற்காக சிசு கேட்டல்திறன் திட்டம் (Infant Hearing Program) அவர்கள் தொடர்பாடக் கற்றுக்கொள்ள உதவிசெய்கிறது.

சிசு கேட்டல் திறன் திட்டம் பின்வருவனவற்றுக்கு உதவிசெய்கிறது:

- பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும், மருத்துவமனையில் அல்லது சமூகத்தில் கேட்டல்திறன் பரிசோதனைகள்
- பிறந்த குழந்தைகளில் நிரந்தரமான கேட்டல்திறன் இழப்பை அடையாளம் காண்பதற்கான மதிப்பீடுகள்
- செவிப்புலம் இழப்பு ஏற்படும் அபாயத்தில் உள்ள குழந்தைகளை கண்காணித்தல்
- மொழி மேம்பாட்டுச் சேவைகள்

## மொழித்திறனைப் பிள்ளைகள் எவ்வாறு விருத்திசெய்கிறார்கள்?

உங்கள் பிள்ளை வளர்ந்து கற்றுக் கொள்ளும்போது மொழி விருத்தியடைகிறது. பிள்ளை பிறந்தநேரம் முதல் நிலைபேறான மொழி மாதிரிகளை வழங்குவதில் குடும்பத்தவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள்.

பேசும் மொழியைக் கேட்பதன் மூலமும் மற்றும் பயன்படுத்துவதன் மூலமும் அல்லது பார்வை மூலமாகவும், சைகை மொழியைப் பார்த்துப் பயன்படுத்துவதன் மூலமாகவும் மொழியை பார்த்து கற்றுக்கொள்ள முடியும்.

(பின்பக்கத்தில் தொடர்கிறது)

## என்ன சேவைகள் உள்ளன?

திட்ட வல்லுநர்கள், உங்கள் பிள்ளையின் மொழி வளர்ச்சியை ஆதரிக்கலாம், அத்துடன் உங்கள் பிள்ளைக்கான சேவைகள் குறித்த முடிவுகளை நீங்கள் எடுக்க உதவுவதற்கான தகவல்களை வழங்குவதன் மூலமும் உங்களுக்கு உதவிசெய்யலாம்.

பின்வரும் விடயங்களில் உங்களுடன் இணைந்து நிபுணர்களின் குழு ஒன்று பணியாற்றும்:

- காது கேட்கும் கருவிகள் போன்ற கேட்டலுக்கு உதவிசெய்யும் தொழில்நுட்பங்களை பரிந்துரைத்தல்
- உங்கள் பிள்ளைக்கு உதவுவதற்காக ஆரம்ப மொழி விருத்திக்கான உத்திகளை உங்களுக்குக் கற்பித்தல்
- விளையாட்டின் மூலம் உங்கள் பிள்ளையின் மொழி விருத்தியை எவ்வாறு ஊக்குவிப்பது என்பதை உங்களுக்குக் காண்பித்தல்
- பிற திட்டங்கள் மற்றும் உள்ளூர் சமூக ஆதாரவளங்களை நீங்கள் அணுகுவதற்கு உதவுதல்

## நான் யாருடன் இணைந்து பணியாற்றுவேன்?

உங்கள் சிசுக்களுக்கான கேட்டல்திறன் திட்ட வல்லுநர்கள் குழு உங்கள் கேட்டல் திறனை மதிப்பிடுபவர்கள் உள்ளடங்கலாகப், பின்வருவோரை உள்ளடக்கலாம்:

- குடும்ப ஆதரவுப் பணியாளர்
- பேச்சு-மொழி நோயியல் நிபுணர்
- சைகை மொழி ஆலோசகர்

உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்குமான சேவைகளை ஒருங்கிணைப்பதற்காக ஏனைய சமூகப் பங்காளர்களுடன் இணைந்து இந்தக் குழு செயல்படும்.

## நான் எங்கே மேலும் கற்றுக்கொள்ள முடியும்?

உங்கள் சிசுக்களுக்கான கேட்டல்திறன் திட்டத்தின் மதிப்பீட்டாளர் உங்கள் பிள்ளைக்கான மொழி விருத்திச் சேவைகள் பற்றிய மேலதிக தகவல்களைப் பகிர்ந்து கொள்ளலாம். உங்கள் பிள்ளையின் நிபுணர்கள் குழுவும் மேலும் தகவல்களையும் ஆதரவையும் வழங்குவார்கள்.

மேலும் தகவலுக்குத் தயவுசெய்து பார்வையிடுங்கள்:
**ontario.ca/infanthearing**